


தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று முன்தினம் (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று முன்தினம் (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு இந்து குழும இயக்குநர் என். ராம் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூத்த சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று முன்தினம் (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு கவிப்பேரரசு வைரமுத்து மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று முன்தினம் (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று முன்தினம் (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு நடிகர் சத்யராஜ் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

### பெரியாரைப் பற்றி

# மு.க.முத்து பாடிய பாடல் புகழ் பெற்ற ஒன்று!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இரங்கல்!

சென்னை, ஜூலை 20-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க. முத்து அவர்கள் (வயது 77) இன்று (19.7.2025) காலை மறைவுற்றார் என்ற செய்தி பெரிதும் வருத்தத்திற்குரியதாகும்.

**‘தமிழரெல்லாம் மானத்துடன்**

**வாழ்வதற்கு யார் காரணம்?**

**பெரியார் காரணம்” என்று அவர் பாடிய பாடல் புகழ் பெற்ற ஒன்றாகும். கழகக் கூட்டங்களில் எல்லாம் ஒலி பரப்பப்படுவது வாடிக்கையாகும்.**

புகழ் பெற்ற பாடகர் சிதம்பரம் செயராமனின் இசை வாரிசு என்று சொல்லத்தக்க வகையில் பேசப்பட்டவர்.

நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சகோதரரும் ஆவார்.

திரைப்படத்துறையிலும் மு.க. முத்து அவர்கள் பயணித்தவர்; அவர்தம் பிரிவால் துயரத்திற்கு ஆளாகியிருக்கும் குடும்பத்தினருக்கும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# திரையுலகில் சிறந்து விளங்கியவர் மு.க.முத்து!

## மறைவுக்கு – ஐ.ஜெ.கே.தலைவர் டாக்டர் ரவி பச்சமுத்து இரங்கல்!

சென்னை, ஜூலை 21-

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகனும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சகோதரருமான மு.க.முத்து அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று மறைந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

தமிழ்த் திரைப்பட நடிகரும் மேடைப் பாடகருமான மு.க.முத்து அவர்கள் திரைத்துறையில் சில காலங்கள் இருந்தாலும் மக்கள் மனதை வெகுவாகக் கவர்ந்தவர். திரைத்துறையில் 1970 ஆம் ஆண்டு நுழைந்து, பிள்ளையோ பிள்ளை, அணையா விளக்கு உள்ளிட்ட பல படங்களில் நடித்தும் தனது சொந்தக் குரலில் பல்வேறு பாடல்களை பாடியும் புகழ்பெற்றவர்.

மு.க.முத்து அவர்களின் மறைவால், அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் - திரைத்துறை நண்பர்களுக்கும் என் சார்பிலும், இந்திய ஜனநாயகக் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆன்மா இறைவனடி நிழலில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றேன் என்று இந்திய ஜனநாயகக் கட்சித் தலைவர் டாக்டர் ரவிபச்சமுத்து தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை – இன்று

# கல்லூரி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுப் பிரச்சாரம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி; தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் கழக மாணவர் அணி சார்பில் கழக மாவட்டந்தோறும் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக உறுப்பினர் சேர்க்கை இயக்கம் குறித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள், கல்லூரி மாணவர்களிடையே மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்புகளின் மாணவர் அணி நிர்வாகிகள் மூலம் துண்டுப் பிரசுரங்கள் மூலம் விழுப்புணர்வை ஏற்படுத்தும் பரப்புரையை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டு, தொடக்கமாக இன்று (ஜூலை 21ஆம் தேதி) மாநிலச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி கோவை அரசுக் கலைக் கல்லூரி மாணவர்களிடையே விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைக்கிறார்.

இந்தப் பிரச்சாரத்தைத் தமிழ்நாடு முழுவதும் வாய்ப்புள்ள அனைத்துக் கல்லூரிகளில் கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, மேற்கொள்வார்கள் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

| மாநிலத் துணைச் செயலாளர் | கல்லூரியின் பெயர் |
|---|---|
| மன்னை த.சோழராஜன் | ம.இரா அரசு கலைக் கல்லூரி - மன்னார்குடி |
| சேலம் இரா.தமிழரசன் | அரசு கலைக் கல்லூரி - சேலம் 7 |
| அதலை பி.செந்தில்குமார் | எஸ். வெள்ளைச்சாமி நாடார் கலை அறிவியல் கல்லூரி - மதுரை |
| தமிழ் கா.அமுதரசன் | மாநிலக் கல்லூரி - சென்னை |
| பி.எம்.ஆனந்த் | பிஷப் ஹீபர் கலை அறிவியல் கல்லூரி - திருச்சி |
| வி.ஜி.கோகுல் | அரசு கலைக் கல்லூரி - கோவை |
| திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து | எஸ்.எஸ்.ஏ கலை அறிவியல் கல்லூரி, சிங்கம்புணரி, சிவகங்கை |
| திருமதி ஜெ.வீரமணி | சிக்கய்ய அரசு கலைக் கல்லூரி - ஈரோடு |
| ஜெ.இராமகிருஷ்ணன் | தாகூர் கலை அறிவியல் கல்லூரி - பல்லாவரம் |

“அண்ணா அறிவாலயம்”
சென்னை18.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.

# திருவள்ளூரில் வார் ரூம் திறப்பு!

திருவள்ளூர், ஜூலை. 21–

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் ஆவடி அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் (வார் ரூம்) திறப்பு விழா மாவட்ட கழக இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் வரவேற்பில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புதிய வார் ரூமை தொடங்கி வைத்தார். இதில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. , தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், நிர்வாகிகள் சி.ஜெரல்டு, பி.டி.சி.செல்வராஜ், நிவேதா, ம.ராஜ், வி.ஜெ. சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், சன்.பிரகாஷ், மேயர் ஜி.உதயகுமார், ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், ஜி.விமல்வர்ஷன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கூத்தாநல்லூர் நகராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் கலந்துகொண்டு துவக்கிவைத்தார். மனுக்களில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் மோகனசுந்தரம், நகரச் செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர்மன்றத் தலைவர் பாத்திமா பஷீரா உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.